**OS No. 104/2017**
DW 2 – மேநாட்டான்

நாள் 02.04.2026

**பி.வா.சா. 2 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

நான் 1 ம் பிரதிவாதியின் பெரியப்பா ஆவேன். வழக்கு பற்றிய விபரங்களை 1 ம் பிரதிவாதி கயல்விழிதான் என்னிடம் சொன்னார்கள் அவர் தான் என்னை நீதிமன்றத்திற்கு சாட்சியம் அளிக்க அழைத்து வந்தார். எனக்கு படிக்கத் தெரியும்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 14 ல் சொத்து விபரத்தில் சர்வே எண் 149/6 ஏ, என உள்ளது என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி கயல்விழி ராக்கு என்பவரிடமிருந்து பி.வா.சா.ஆ 13 மூலம் சர்வே எண் 149/6 ஏ – ஐத் தான் கிரயம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான்.

1 ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்த ராக்கு என்பவரும் வள்ளி என்பவரும் உடன் பிறந்த சகோதரிகள் என்றால் சரிதான். வள்ளியின் மகன் முருகேசன் என்றால் சரிதான். சர்வே எண் 149/6 பி – ஐ வள்ளியின் மகன் முருகேசன் தான் வாதி ராஜாமணிக்கு கிரயம் கொடுத்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் கிரயம் வாங்கியதாகச் சொன்னார்கள்.

ஆதி புல எண் 149/6 ஐ முத்துராசுதேவர் என்பவரிடமிருந்து ராக்குக்கு நான் தான் பதிவு கிரயப்பத்திரம் மூலம் கிரயம் வாங்கிக்கொடுத்தேன். அந்த கிரயப்பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் ஏதும் செய்யவில்லை.

ஆதி புல எண் 149/6 என்பது 149/6 ஏ, மற்றும் 149/6 பி என்று உட்பிரிவு செய்யப்பட்ட விபரம் எனக்குத் தெரியாது. அது தொடர்புடைய வருவாய்துறை ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 4 ல் சர்வே எண் 149/6 ஏ பட்டா எண் 450 ல் ராக்கு பெயரிலும், பட்டா எண் 451 ல் சர்வே எண் 149/6 பி

வள்ளி பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். ஆனால் அது எப்படி உட்பிரிவு செய்யப்பட்டது என்று எனக்குத் தெரியாது.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 5 ஆவணத்தில் கடந்த 14.04.1988 ம் தேதிய புல எண் 149/6 ஏ பட்டா எண் 450 ல் ராக்கு பெயரிலும், புல எண் 149/6 பி பட்டா எண் 451 வள்ளி பெயரிலும் உள்ளது என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ 9 ஆவணத்தில் ராக்கு பெயரில் புல எண் 149/6 ஏ – க்கு மட்டும் தான் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான் சொல்வது போல் புல எண் 149/6 ஐ 1 ம் பிரதிவாதி கயல்விழி கிரயம் வாங்கவில்லை என்றாலும், சரிவே எண் 149/6 ஏ – ஐ தான் கிரயம் வாங்கியுள்ளார் என்றாலும் சரியல்ல.

தாவா புல எண் 149/6 பி – ஐ வாதி ராஜாமணி கிரயம் வாங்கியுள்ளார் என்றாலும், அவர் தான் தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்தை ஒரு போதும் அவர் அனுபவம் செய்தது கிடையாது.

எனக்கும் ராஜாமணிக்கும் எந்த பகைமையும் கிடையாது. எனது மகன் கணேசன் பஞ்சாயத்து போர்டு தேர்தலில் நின்ற போது வாதி ராஜாமணி ஆதரவு தரவில்லை என்றால் சரிதான்.

அந்த பகைமையின் காரணமாகத் தான் நானும் வாதியின் குடும்பமும் கடந்த 5 – 6 வருடங்களாக பேசிக்கொள்வதில்லை என்றாலும், தாவா சொத்தை வாதி கிரயம் வாங்கி அனுபவம் செய்து வரும் விபரம் எனக்கு நன்கு தெரிந்திருந்தும், 1 ம் பிரதிவாதி எனது தம்பி மகள் என்பதாலும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்தை கிரயம் வாங்கிய நாள் முதல் வாதி தான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. ஆதி சர்வே எண் 149/6

என்பது 149/6 ஏ மற்றும் 149/6 பி என உட்பிரிவு செய்யப்பட்ட விபரம் எனக்கு தெரிந்திருக்கும் நிலையில் சர்வே எண் 149/6 ஏ ஐ 1 ம் பிரதிவாதியும் சர்வே எண் 149/6 பி – ஐ வாதி கிரயம் வாங்கிய விபரமும் எனக்குத் தெரியும் என்றால் 1 ம் பிரதிவாதி வாங்கிய கிரயம் மட்டும் தான் எனக்குத் தெரியும் வாதி வாங்கியது தெரியாது. வாதி 1 ம் பிரதிவாதியிடம் தகராறு செய்த போது தான் அவர் கிரயம் வாங்கிய விபரம் எனக்குத் தெரியும்.

வாதி 1 ம் பிரதிவாதியிடம் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு தகராறு செய்தார். அந்த தகராறு தொடர்பாக 1 ம் பிரதிவாதி காவல்துறை நடவடிக்கையோ வருவாய்துறை நடவடிக்கையோ எடுத்த விபரம் எனக்குத்தெரியாது. வழக்கு சொத்தை மாண்பமை உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் வருவாய் துறையினர் அளந்தது தெரியுமா என்றால் அளந்ததாக 1 ம் பிரதிவாதி என்னிடம் சொன்னார்.

வாதி 1 ம் பிரதிவாதியிடம் ஒரு போதும் சண்டையிட்டது கிடையாது என்றாலும், 1 ம் பிரதிவாதி, வாதியின் தாவா சொத்தில் உள்ள அமைதியான அனுபவத்தை தடை செய்ததால் தான் வாதி தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**